பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 10 2025 THURSDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

4. நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>>

தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மும்பையில் நிதிசார் தொழில்நுட்ப மாநாட்டில் இன்று கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

நம்நாட்டில் மாதந்தோறும் 25 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு டிஜிட்டல் பணபரிவர்த்தனை நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப பயன்பாடு அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடைந்திருப்பதை இது உறுதி செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தொழில்நுட்பத்தை பிற நாடுகளுக்கு வழங்குவதோடு அவற்றை உருவாக்குவதற்கும் இந்தியா உதவி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் அன்னையாக திகழும் இந்தியா வளரும் நாடுகளின் நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளது என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>>

பருப்பு வகைகளின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கென இயக்கம் ஒன்று தொடங்கப்படவுள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் இந்த இயக்கத்தை தொடங்கி வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேளாண் உற்பத்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் அவற்றை அதிகரிக்க வகை செய்யும் திட்டத்தையும் பிரதமர் அன்றைய தினம் தொடங்கி வைக்கவுள்ளதாக திரு சிவராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<>>>>>

தொலைத் தொடர்புத் துறையில் இந்தியா கிட்டதட்ட சுயசார்பினை எட்டியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் மொபைல் உச்சிமாநாட்டில் தொலைத் தொடர்பு குறித்த அமர்வில் இன்று கலந்து கொண்டு அவர் பேசினார்.

டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சியில் தொலைத் தொடர்புத் துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>>

புகையிலைப்பொருட்கள் பயன்பாட்டினை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தேசிய அளவிலான இந்த இயக்கம் 60 நாட்கள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து இளையோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளதாகவும் திருமதி அனுபிரியா பட்டேல் கூறினார்.

<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 30 மீனவர்களும், காரைக்காலைச் சேர்ந்த 17 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் இன்று சிறைபிடிக்கப்பட்டுள்ளதை அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கைது சம்பவம் மீனவர்களிடையே துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற கைது சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதை தடுக்க கூட்டு பணிக்குழுவை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<>>>>>

திமுக-வுக்கு எதிரான கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டியதன் அவசியத்தை பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் ஆட்சிமாற்றத்தை விரும்புவதாக தெரிவித்தார்.

கரூர் விவகாரத்தில் மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு தான் உள்ளதாக அவர் கூறினார்.

அதனை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாகவும் திரு நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டினார்.

<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் - 27 செகண்ட்ஸ்)

<<<<>>>>>

தபால் மற்றும் வனத்துறை சார்பில் இரண்டு நாள் அஞ்சல் தலை கண்காட்சி இன்று சிவகாசியில் தொடங்கியது.

கரிசல் மண்ணில் அறிவின் துளிர் என்ற மையக் கருத்தோடு இந்த விழிப்புணர்வு கண்காட்சி நடைபெறுவதாக தென்மண்டல அஞ்சல் துறை இயக்குநர் திரு ஆறுமுகம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – ஆறுமுகம் – 35 செகண்ட்ஸ்)

பழைய அஞ்சல் தலைகள் மற்றும் நாணயங்கள் இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ளதாக இதனை பார்வையிட்ட மாணவி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – மாணவி – 21 செகண்ட்ஸ்)

<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூரில் சர்வதேச விண்வெளி வார விழாவையொட்டி, விண்வெளிக் கண்காட்சியை ஆட்சியர் திருமதி மிருணாலினி இன்று தொடங்கி வைத்தார்.

---------------

வேலூர் மாவட்டத்தில் அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்ற ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

---------------

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பிரவீன் குமார் இன்று தொடங்கி வைத்தார்.

---------------

திருவள்ளூர் மாவட்டம் திருமழிசையில் வங்கிசார் நிதி சேவை குறித்த பிரச்சார முகாம் இன்று நடைபெற்றது.

---------------

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்லும் போது தங்களது பெயரை உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட இந்திய தூதரகங்களில் பதிவு செய்ய வேண்டும் என்று ஆட்சியர் திருமதி பொற்கொடி கேட்டுக் கொண்டுள்ளார்.

----------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் புகையிலை இல்லா இளைஞர் பிரச்சார விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி அழகு மீனா இன்று தொடங்கி வைத்தார்.

---------------

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வரும் 22 ஆம் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கவுள்ள கந்த சஷ்டி பெருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திரு இளம் பகவத் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட 9 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 44-45, 45-30, 45-33 என்ற செட் கணக்கில், கொரியாவை வென்றது.

இதன்மூலம் இந்தியாவிற்கு குறைந்தது வெண்கலப்பதக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

----------------

Arctic ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dhruv Kapila – Tanisha Crasto இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 23-25, 21-14, 21-17 என்ற செட்கணக்கில் யுக்ரைனின் Oleksii Titov – Yevheniia Kantemyr இணையை வென்றது.

----------------

ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், மலேசியாவின் Anrie Goh-ஐ வென்றார்.

----------------

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் வருண் கபூர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்றுப் போட்டியில், இந்தியா – சிங்கப்பூ இடையேயான ஆட்டம் தற்போது சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது.

---------------------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankita Raina – Rutuja Bhosale இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

------------

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா தற்போது தென்னாப்பிரிக்காவை எதிர்த்து ஆடிவருகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன் வரை 35 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>